ஸ்ரீலக்ஷ்மி பிக்சர்ஸ்
தாயைப் போல பிள்ளை
நூலைப் போல சேலை
கதை, வசனம்
A.P.நாகராஜன்
டைரக்ஷன்
K.சோமு
சங்கீதம்
K.V.மஹாதேவன்
பாடல்கள்
மருதகாசி
ஸ்டுடியோ: பிலிம் சென்டர்
தயாரிப்பு: V.K.ராமசாமி • A.P.நாகராஜன்

உருவாக்கியவர்கள்

★★★

கதை வசனம்	... ஏ. பி. நாகராஜன்
சங்கீதம்	... கே. வி. மஹாதேவன்
உதவி	... புகழேந்தி
பாடல்கள்	... அ. மருதகாசி
ஒளிப்பதிவு டைரக்ஷன்	... வி. கே. கோபன்ன
ஒளிப்பதிவு	... விந்தன்
ஒலிப்பதிவு	... ப்ரான்ஸிஸ் ஏ. சாமி (பிலிம் சென்டர்)
பாடல்கள் ஒலிப்பதிவு	... டி. எஸ். ரங்கசாமி (பாரமவுண்ட்)
எடிட்டிங்	... டி. விஜயரங்கம், கே. துரைராஜ்
ஆர்ட் டைரக்டர்	... பிரசாத்ராவ் Ch. E.
அரங்க நிர்மாணம்	... எல். பெருமாள்ராஜு
எலக்ட்ரீஷியன்	... வி. ராமச்சந்திரன்
ஓவியம்	... வி. ராமலிங்கம்
லாபரட்ரி	... பால், ஜி. ஸிந்தே, டி. ஈஸ்வர்சிங்
மேக்கப்	... கஜபதி
ஆடை அலங்காரம்	... ராமகிருஷ்ணன்
நடன அமைப்பு	... சம்பத்-சின்னி
ஸ்டில்ஸ்	... ஆர். வெங்கடாச்சாரி
புரொடக்ஷன் மானேஜர்	... எஸ். வி. ராஜகோபால்
நிர்வாகம்	... ஆர். வெங்கட்ராமன்
விளம்பரம்	... பாலு பிரதர்ஸ் Bee Bees Advertising Service

"தாயைப் போல பிள்ளை
நூலைப் போல சேலை"

கௌரவ நடிகர் :

நடிகர் திலகம். திரு. **சிவாஜி கணேசன்** அவர்கள்
" பொற்கைப் பாண்டியன் "
ஓரங்க நாடகத்தில் பங்கு கொண்டுள்ளார்

நடிகர்கள்

திரு. மனோஹர்	திருமதி. எம். என். ராஜம்
,, வி. கே. ராமசாமி	,, பண்டரிபாய்
,, சாரங்கபாணி	,, பி. கண்ணாம்பா
,, டி. கே. ராமச்சந்திரன்	,, ஸி. கே. சரஸ்வதி
,, டி. என் சிவதாணு	,, பத்மினி பிரியதரிசினி
,, சாயிராம்	,, ஸி. டி. ராஜகாந்தம்
,, எம், ஈ. மாதவன்	,, எம்.எஸ்.எஸ்.பாக்கியம்
,, ராமனுதன்	,, சந்திரா
,, யதார்த்தம், பொன்னுசாமி பிள்ளை	,, சிவகாமி (புதுமுகம்)

எஸ். வி, ராஜகோபால், மாதவன் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர்.

பின்னணி பாடியவர்கள் :

திரு. சீர்காழி. கோவிந்தராஜன், திருச்சி. லோகநாதன், திருமதி. சுசீலா, சூலமங்கலம் ராஜலக்ஷ்மி, ஜமுனாராணி, பாலசரஸ்வதி, எல். ஆர். ஈஸ்வரி முதலியோர்

ஸ்ரீ லெக்ஷ்மி பிக்சர்ஸ்

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை

கதைச் சுருக்கம்

போலீஸ் இலாகாவில் உத்தியோகம் பார்த்து வந்தது பட்டாளத்து வீராசாமியின் குடும்பம். வீராசாமியின் மகன் நாராயணசாமி தென்னூரில் ஹெட் கான்ஸ்டேபில். நாராயணசாமியின் மகன் ரங்கசாமி பாலக்கரையில் ஸப் இன்ஸ்பெக்டர். ரங்கசாமியின் மகன் ராமசாமி திருச்சியில் டிப்டி சூப்பரின்டென்டெண்ட். ராமசாமியின் தங்கை லக்ஷ்மி ஒரு கல்லூரி மாணவி.

வீராசாமியின் மனைவி வேலம்மாள் இராணுவத்தினின்றும் ஓய்வு பெற்ற தன் கணவனுடன் குடும்பத்தில் ஓய்வு பெற்றிருக்கும் கிழவி. நாராயணசாமியின் மனைவி செல்லம்மாள் சற்று பிறவியிலேயே முன் கோபி. அவசர புத்தியுடையவள். அனைவரிடமும் கொஞ்சம் வாய்த்துடுக்காக நடந்து கொள்ளும் சுபாவமுடையவள். ரங்கசாமியின் மனைவி பங்கஜம் குடும்பத்துப் பொறுப்புகள் அனைத்தையும் ஏற்று எல்லோருக்கும் பணிவிடைகள் செய்து அன்பும், பண்பும் நிறைந்த ஒரு கிருஹலக்ஷ்மியாக இருந்து வந்தாள்.

"தாயைப்போல பிள்ளை" என்ற சொல்லுக்கிணங்க டிப்டி ராமசாமி தன் குடும்பத்திலும், கடமையிலும் அனைவரது நன்மதிப்பையும் பெற்றிருந்தார். இப்படி ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்த இந்த அதிசயக் குடும்பத்தைப் பற்றி ஆச்சரியப்படாதவர்கள் இருக்கமுடியாது.

அதே போல நாட்டிய கலாராணி மரகதமும் அவளது தாய் மாணிக்கம் மாளும் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெரிதும் பெற்றிருந்தனர். காரணம் யாதெனில் கேவலம் வருமானத்தையே முக்கிய குறிக்கோளாகக் கருதாமல் பல பொதுப்பணிகளுக்காக அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் நடத்தி நிதி திரட்டிக் கொடுத்து மாணிக்கம்மாள் உதவி வந்ததினல் அவர்களை ரசிகமக்கள் மிகவும் பாராட்டிவந்தனர். **"தாயைப் போல பிள்ளை"** என்ற பட்டப்பெயர் மரகதத்திற்கும் இருந்துவந்தது.

போலீஸ் குடும்பங்களுக்கென்று பிரத்தியேக பிரசவவிடுதி ஒன்றும் பள்ளிக்கூடம் ஒன்றும் கட்டுவதற்கான நிதி திரட்டுவதற்கு டிப்டி, ராமசாமி

யின் தலைமையில் முயற்சிகள் நடைபெறுகின்றன. மரகதத்தின் பொதுச் சேவைகளைத் தன் தங்கை லக்ஷ்மியிடமிருந்து நன்கறிந்த ராமு, அவளது கலை நிகழ்ச்சி ஒன்று நடத்தினுல் போதுமான அளவு நிதி திரட்டிவிடலாமென்று தீர்மானித்து, மரகதத்தின் தாய் மாணிக்கம்மாளை பேட்டிகாண நேரம் கேட்டு வருமாறு போலீஸ் சேவகன் ஒருவனை அனுப்புகிருன்.

இது இப்படியிருக்க, கள்ள நோட்டுகளை விநியோகம் செய்யும் கூட்டத்தைச் சேர்ந்த சுந்தர், மரகதத்தின் புகழையும் அவளது கலை நிகழ்ச்சிகளுக்கு வசூலாகும் பணத்தையும் கேள்விப்பட்டு, மரகதத்தின் கலைநிகழ்ச்சிகளை காண்ட்ராக்ட் எடுத்து நடத்தி, பண வசூலின் போது உண்மை நோட்டுகளுக்குப் பதிலாக, கள்ளநோட்டுகளை விநியோகம் செய்து விடுவது என்ற தீர்மானத்துடன், தன் காதலி அமுதா "நண்பன் கல்கண்டு" முதலியவர்களுடன் திருச்சியில் முகாம் செய்கிருன். ஆனுல் அவனது முயற்சி ஆரம்பத்திலேயே பலிக்காமல் போய்விடுகிறது.

"பொதுக்காரியங்களில் மட்டும்தான் மரகதம் பங்கெடுத்துக் கொள்ள முடியும், பிரத்தியேகக் கலை நிகழ்ச்சிகளுக்கு ஒப்பந்தம் செய்து கொள்வதில்லை"யென மாணிக்கம்மாள் நிராகரித்து விடுகிருள்.

தன் திட்டம் வெற்றிபெருமல் போகவே மாணிக்கத்தையும், மரகதத்தையும் எப்படியும் பழிவாங்க சமயத்தை எதிர்பார்த்திருக்கிருன் சுந்தர். ஆனுல் அதே சமயம் பொதுக்காரியம் ஒன்றைச் செய்வதற்காக முயற்சி செய்யும் டிப்டி ராமு, தன் வீடுதேடி வருவதைக் கெளரவக் குறைவாக எண்ணிய மாணிக்கம்மாள் தானே ராமுவின் வீட்டிற்குச் செல்கிருள்.

ஒரு ஆட்டக்காரியின் தாய் தன் பேரன் ராமுவைத் தேடி தன் வீட்டிற்கு வந்ததினுல், ராமுவின் மேல் சந்தேகம் கொள்கிருள் செல்லம்மாள்.

இதற்கிடையில் தன் ஊரில் கள்ளநோட்டுகளை விநியோகம் செய்யும் கொள்ளைக் கூட்டம் முகாம் செய்திருப்பதாக ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் கண்ணன் மூலம் தகவல் அறிந்த டிப்டி ராமு, அவர்களைக் கண்டு பிடிக்க பாட்டன், தகப்பன், முதலியவர்களுக்குக் கட்டளையிடுகிருன். அவர்களும் புலன் விசாரணையில் ஈடுபடுகின்றனர்.

சுந்தரும்-ராமுவும், கல்லூரி நண்பர்கள். எதிர்பாராத விதமாக ஒரு நாள் சுந்தர் ராமுவைச் சந்திக்க நேரிடுகிறது. சுந்தர் ஒரு கொள்ளைக்கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று அறியாத ராமு அவனுடன் ஒன்றிப் பழகுகிருன். ஆனுல் ராமு ஒரு போலீஸ் அதிகாரி என்பதை அறிந்த சுந்தர், தன் திட்டங்களுக்கு அவன் இடையூருக இருக்கநேரிடும் என்றெண்ணி

அவனுக்கும் ஒரு முடிவு கட்டும் ஆலோசனையிலாழ்கிருன்.

ஒரு சமயம் ராமுவின் தங்கை லக்ஷ்மி மரகதத்தைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிருள். அங்கு ராமுவும் மரகதமும் வார்த்தையாடிக் கொண்டிருந்ததைத் தவறுதலாகப் புரிந்து கொண்ட செல்லம்மாள் குடும்பத்தில் ஒரு குழப்பத்தை உண்டாக்குகிருள். மரகதம் அவமானப் படுத்தப்பட்டு வெளியேறுகிருள். ராமுவும் வீட்டைவிட்டு வெளியேறத் தீர்மானிக்கிருன். ஆனுல் முடிவில் தன் தாய் சொல்லுக்குக் கட்டுபடுகிருன். மரகதத்திற்கு மன்னிப்புக் கடிதம் எழுதுகிருன். கடிதம் கிடைத்த மரகதம், ராமுவுக்குப் பதில் எழுதுகிருள். கடிதப்போக்கு வரத்தைத் தவறுதலாகப் புரிந்துகொண்ட மாணிக்கம், தன் மகளைக் கண்டிக்கிருள். அதேசமயம் மன்னிப்புக் கேட்க வந்த ராமுவையும் அவமதித்தனுப்புகிருள்.

ஒரு தவறும் செய்தறியாத இரு உள்ளங்களும் ஒன்றையொன்று மன்னிப்புக்கேட்க ஏங்கித்தவிக்கின்றன.

லக்ஷ்மியின் மூலம் செல்லம்மாளுக்குச் சந்தேகம் நிவர்த்தியாகிறது. கடிதத்தைப் பிரித்துப்பார்த்த மாணிக்கமும் தன் தவறுதலுக்கு மனம் வருந்துகிருள். அதற்குள் சுந்தரின் திட்டங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்படுகின்றன. பங்கஜமும், லக்ஷ்மியும் சுந்தரின் வலையில் சிக்குகின்றனர். மாணிக்கம்மாள் அமுதாவிடம் அகப்பட்டுக்கொள்கிருள்.

வெளியிலிருந்து வீடு திரும்பிய ராமு பாட்டிகளின் மூலம், தன் தாயும் தங்கையும் தன்னைத்தேடிக்கொண்டு வெளியே போனவர்கள் இன்னும் வீடு திரும்பவில்லை என்ற செய்தி அறிந்து திடுக்கிடுகிருன். அதே சமயம் மரகதம் ஓடிவந்து மாணிக்கம்மாளையும், மாடசாமியையும் காணவில்லை என்ற செய்தியைச்சொல்ல ராமு போலீஸ் ஸ்டேஷன்களுக்குத் தகவல் அனுப்புகிருன்.

டெலிபோன்கள் பறக்கின்றன. மகன், தந்தை, பாட்டன் முதலியவர்கள் கடமைக்காகப் பாடுபடத்தயாராகின்றனர். மாணிக்கம்மாள், மரகதம், பங்கஜம், லக்ஷ்மி இவர்களின் முடிவான நிலையை வெள்ளித்திரையில் காண்க!.......

பாடல்கள்

1

இயற்றியது:
அ. மருதகாசி.

பாடியவர்கள்:
திருச்சி லோகநாதன்,
சீர்காழி கோவிந்தராஜன்
சூலமங்கலம் ராஜலக்ஷ்மி
எல். ஆர். ஈஸ்வரி

பாட்டி சொல்லும் கதை கேட்டாலே
பலனுண்டு நமக்கு அதனாலே – –
கூட்டமாகவே கூடிடுவோம் — நம்
நாட்டுக் கதைகளைக் கேட்டிடுவோம்

பாலர்களே வாருங்க!
பக்கத்தில் உக்காருங்க!
கதையும் நீங்க கேளுங்க
கருத்துடனே வாழுங்க

ராஜா கதை வேணுமா? இல்லே
ராணி கதை வேணுமா?
வீரன் கதை வேணுமா? — நல்ல
விடுகதைகள் வேணுமா?

ராஜா கதை
ராஜா கதை
ராஜா கதை
ராஜா கதை

பாண்டியநாட்டை நீதிநெறியுடன்
ஆண்டு வந்தான் ஒரு மன்னன் — பொற்கைப்
பாண்டியனென்றே காரணப் பெயர் கொண்ட
அவன் கதை கேளுங்கள் இன்னும்

திருச்சி லோகநாதன்

[தொகையரு]

நாடாளும் மன்னவன் மாறு
வேடத்திலே
நகர் சோதனைக்கு வந்தான்
நடுநிசியில் ஒருநாள்–அங்கு
ஒரு வீட்டிலே இருவர் பேச்சரவம்
வரவே
ஒட்டி நின்முன் – – அதையுற்றுக்
கேட்டான்

[பாட்டு]

ஆண் :– யாத்திரை போய் வாரேன் கண்ணே — புன்னகை
பூத்த முகத்துடன் விடைகொடு பெண்ணே
யாத்திரை — தீர்த்த — யாத் —

பெண் :– வீட்டிலே நீங்க இல்லாமல்
பயமின்றி நான் எப்படி வாழ்வது சுவாமி?

ஆண் :– நம் காலில் முள்பட்டால்–தன் கண்ணில் பட்டாற்போல்
எந்நாளும் எண்ணும் நம் – மன்னவன் இருக்கையில்
வீண் பயமேனடி பெண்ணே – வேந்தன்
மக்களைத் தாய்போலக் காப்பானே கண்ணே

பெண் :– விடை தந்தேன் போய்வாரும் சுவாமி - பயம்
கிடையாது ஏனென்ருல் இது தமிழ்ப் பூமி

[தொகையரு]

மக்கள் தன்மேல் வைத்துள்ள உண்மை அன்பு
மலைபோன்ற நம்பிக்கை இவற்றை எண்ணி
மனமகிழ்ந்து அரண்மனைக்கு மன்னன் சென்ருன்
நாட்கள் பல சென்றன – மன்னன் தினம் தவருது
நகர் சோதனை வந்தான் – அவன்
நாட்டு மக்கள் நல்வாழ்வைப் பாதுகாத்தான்
மன்னவன் பாதுகாத்தான் —

[பாட்டு]

பெண்:- வரவேண்டும் சுவாமி

ஆண்:- சுகம்தானா கண்ணே
உனையெண்ணி மனம்
ஏங்கி - ஓடிவந்தேன்
பெண்ணே



சீர்காழி கோவிந்தராஜன்

[தொகையறா]

அப்பொழுது கணவனில்லா அந்த வீட்டில்
ஆண்மகனின் பேச்சரவம் கேட்டவேந்தன்
அதுவேறு யாரோ வென்று ஐயமுற்றான் ...
அவசரத்தால் படபடத்துக் கதவைத்தட்டினான் ...

யாரது ?
யாரது ?
யாரது ?
யாரது ?

[தொகையறா]

ஐயகோ ! என்செய்வேன் ! அறிவிழந்தேன் !
ஆத்திரத்தால் தெருக்கதவைத் தட்டிவிட்டேன் !
அயலூர்க்குச் சென்றுவந்த கணவனும் - வேறாள்
வருவதுண்டோ வென்று ஐயமுற்று
மனைவி கற்பில் சந்தேகங்கொள்வானென்று
மற்ற வீட்டுக்கதவையெல்லாம் தட்டிவிட்டேன்
பெரும்பிழையைச் செய்துவிட்டேன் என்றே உள்ளம்
பேதலித்து மன்னவனும் பதறிச்சென்றான்

[பாட்டு]

என்னடி அநியாயமிது? அடியே ராமி
என்று மில்லாவிந்தையாக-யார்கதவைத்தட்டியது- என்
கண்களைப்போலே மக்களைக்காக்கும்

சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

மன்னவன் ஆளும் நாட்டினிலே
கள்வரும் உண்டோ யாரடி கதவைத்
தட்டியதிரவில் வீட்டினிலே
சென்றிடுவோம்! மன்னரிடம்!
தீர்ப்பு வழங்கக்கேட்டிடுவோம் – நாம்
நீதியைக்கேட்போம்!
நீதியைக்கேட்போம்!
நீதியைக்கேட்போம்!
நீதியைக்கேட்போம்!

[தொகையரு]

நீதியோ! நேர்மையோ! நெறிமுறையோ! —
மன்னவனே! — உம
தாட்சியிலும் அநீதி நடக்கலாமோ?
நேற்றிரவு நடுநிசியில் யாரோவந்து
சுற்றியுள்ள கதவையெல்லாம் தட்டிச்சென்ருன்! அந்தக்
கள்வனேச் சும்மா விட்டிடலாமோ?

கொற்றவனே! குற்றம் செய்த – அந்தக்
கையை வெட்டிடவும் வேண்டாமோ?
கையை வெட்டிடவும் வேண்டாமோ?
வெட்டிடவும் வேண்டாமோ?

தன் கையைக் கொடுத்தானே!
தர்மத்தைக்காத்தானே – பின்
பொற்கையைக்கொண்டானே!

பொற்கைப் –
பாண்டியனென்றே காரணப்பெயர்கொண்டு
புகழடைந்தானே பின்னும்!
பாண்டியநாட்டை நீதிநெறியுடன்
ஆண்டுவந்தானே தமிழ்மன்னன்.

2

இயற்றியது:
அ. மருதகாசி.

பாடியவர்:
பாலஸரஸ்வதி.

நல்ல குடும்பம் மிக — மிக
நல்ல குடும்பம்
வள்ளுவனுர் குறள் வகுத்த
வழிமுறையில் நடப்பதுவே [நல்ல]

இல்லறத்தை நல்லறமாய்ச் செய்திடும் மனைவி—அவள்
இதயமென்னும் மாளிகையில் வாழ்ந்திடும் கணவன்
செல்வத்திலே சிறந்ததென்னும் பிள்ளைகள் செல்வம்-இவை
உள்ளதென்று ஊருலகம் சொல்வது எதுவோ-அதுவே [நல்ல]

அன்பு அறம் அஹிம்சைக்கெல்லாம் இலக்கணமாக - அதை
பண்புடனே எடுத்துக்காட்டும் இலக்கியமாக
இன்பம் தரும் பொதுத்தொண்டே இலட்சியமாக - இங்கு
இருப்பதென்று எவரும் என்றும் புகழ்வது எதுவோ அதுவே
[நல்ல]

3

இயற்றியது:
அ. மருதகாசி.

பாடியவர்:
ஜமுனாராணி.

சின்ன மீனைப் போட்டாத்தான்—பெரிய மீனைப் புடிக்கலாம்

சில்லரையை விட்டாத்தான்—பெருந்
தொகையை எடுக்கலாம் [சின்]

கண்ணுங்கண்ணும் சேந்தாத்தான்
—காதல் பாடம் படிக்கலாம்

காலம் நேரம் வந்தாத்தான்
—காரியத்தை முடிக்கலாம் [சின்]

அதட்டிப்பேசும் திறமிருந்தா
—எதிரிவாயை அடக்கலாம்

எல். ஆர். ஈஸ்வரி

உருட்டும் புரட்டும் தெரிஞ்சிருந்தா — உலகத்தையே ஏய்க்கலாம்
குதர்க்க புத்தி இருந்தாத்தான்—குறுக்குவழியில் போகலாம்
குள்ள நரிக்குணமிருந்தா—எதிலும் ஜெயிக்கலாம் [சின்]

வெள்ளை சள்ளை இருந்தாத்தான்-கள்ளத்தனத்தை மறைக்கலாம்
நல்லவர்போல் நடிச்சாத்தான்—கொள்ளையிட்டுக் குவிக்கலாம்
பல்லைக்காட்டத் தெரிஞ்சாத்தான்—பக்குவமாப் பொழைக்கலாம்
கல்லுமனசு படைச்சிருந்தா—அடுத்துக்கெடுக்கலாம் [சின்]

4

இயற்றியது:
அ. மருதகாசி.

பாடியவர்கள்:
சுசீலா, சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

விலை மதிப்பில்லாத அரும்பொருள் கலையே
வேறெதுவும் இதற்கு இணையில்லையே [விலை]

மபா, மபதா, மதநிரிஸறிபமபகா, தாமரிஸ
ஸரீஸ நிஸாரி ரிபாமபகாம, கமமததநிநிரீஸா
உலகில் கலைஞரெல்லாம் ஒருமரத்தின் கிளையே
ஒற்றுமையாயிருந்தால் உயரும் நம்நிலையே [விலை]

நாட்டுக்கு எந்நாளும் பலவித நன்மை
நமது கலைத்தொண்டால் விளைவது உண்மை
போற்றிடும் ரசிகரால் வளர்ந்திடும் பெருமை— நம்மை இந்த
பூமியில் நிலைத்திடச்செய்வதே நம்கடமை


ஜமுனாராணி

5

இயற்றியது:
அ. மருதகாசி.

பாடியவர்:
ஜமுனாராணி.

காரியத்தில் கண்ணு இருக்கணும்
கோரியதை செய்தே முடிக்கணும்
கண்ணியிலே - எதிரியின்
கண்ணியிலே அகப்படாமலே
கடுக்கா கொடுக்கணும் [காரி]

சோரத்தனமே செய்பவர் மனதில்
-சோர்வே கூடாது
சுறுசுறுப்பாக இல்லாவிட்டால்
-தப்பவும் முடியாது
தப்பவும் முடியாது

நேர்மையை காக்கும் சட்டம் - நம்மை
நெருங்கிப் போடுது வட்டம்
நேரத்தை வீணே போக்குவதாலே
நேரும் பிறகு கஷ்டம் [காரி]

சுசீலா

அலட்சியத்தாலே ஆபத்தெ வெலேக்கு வாங்கவும்
கூடாது
அதையும் இதையும் எண்ணிப்பிறகு-ஏங்கவும் கூடாது
ஏங்கவும் கூடாது

அதிர்ஷ்டக் காய்களே உருட்டு - கையில்
அகப்பட்ட வரையில் சுருட்டு
கெடச்சதை யெல்லாம் பத்திரமாக
பெட்டியில் போட்டுப்பூட்டு [காரி]

6

இயற்றியது:
அ. மருதகாசி.

பாடியவர்:
சுசீலா.

நாட்டில் கலேத்தொண்டு ஆற்றிடும் பெண்கள்
கூட்டத்தைத்தவருக மதிப்பதும் ஏனே?
போற்றிப்புகழ்ந்திடும் வாயால் எங்களேத்
தூற்றி எல்லோரும் பழிப்பதும் ஏனே? [நாட்]

சேற்றில் செந்தாமரை பிறப்பதினுல் - அதை
ஜெ த்தினில் யாரும் வெறுப்பதில்லே
சிப்பியிலே முத்துவிளேவதினுல் - அதை
அற்பமென்றே யாரும் நிணேப்பதில்லே [நாட்]

மனிதகுலத்தில் மட்டும் ஏனிந்த பேதம்?
இனத்தால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வாதம்
புனிதமும் ஒருவருக்குப் பிறப்பினில் தானோ?
குணத்தை மதிக்காத கொடுமையும் ஏனோ?

7

இயற்றியது:
அ. மருதகாசி.

பாடியவர்:
சூலமங்கலம் ராஜலக்ஷ்மி.

சந்தேகம் தீராதவியாதி – அது
வந்தாலே தடுமாறும் அறிவென்னும் ஜோதி [சந்]
சிந்தித்துப் பார்க்க விடாது – யாரையும்
நிந்தித்துப் பழிபேச அது தயங்காது [சந்]
தான்பெற்றபிள்ளையைத் தாயாரின் உள்ளமே
தவருக எண்ணவழிசெய்யுமே
காணுத ஏதேதோ கற்பனைகள் காட்டுமே
வீணுகமுன்கோப மூட்டுமே
தேன் சொட்டும் வாக்கையே விஷமாக மாற்றுமே
தீயாகப்பிறர்நெஞ்சை வாட்டுமே
தெளிவான மனதிலும் குழப்பம் உண்டாக்குமே
திசைமாறித் திண்டாடவைக்குமே [சந்]

-★-

அச்சிட்டோர்: ஐடியல் பிரிண்டர்ஸ், 97, பிராட்வே, சென்னை-1.

PRODUCED AND PROCESSED

AT

FILM CENTRE

தயாரிப்பாளர்கள் :

வி. கே. ராமசாமி. ஏ. பி. நாகராஜன்.

டைரக்ஷன் : கே. சோமு.

உதவியாளர்கள் :

உதவி டைரக்ஷன்	...	கே. கே. ஸம்பத்குமார்
உதவி	...	ஜே. குப்புசாமி, கே. தங்கமுத்து
ஒளிப்பதிவு	...	திவாகர் ஷெட்டி, என். ஏ. தாரா
ஒலிப்பதிவு	...	எம். ஜி. ராஜன், பங்காரு
செட்டிங்ஸ்	...	வி. எம். மாணிக்கம்
லாபரட்ரி	...	என். எம். அமோன்கர், ஏ. சந்தா
மேக்கப்	...	தக்ஷிணாமூர்த்தி
உடை அலங்காரம்	...	ஸி. கே. ஹரி
புரொடக்ஷன்	...	ஏ. ஏ. சென்னியப்பன், சுந்தரம்
நிர்வாகம்	...	வி. கே. முத்துராமலிங்கம்.

தயாராகிறது!
ஸ்ரீலக்ஷ்மி பிக்சர்ஸ்
வடிவுக்கு வளைகாப்பு
தயாரிப்பு
V.K.ராமசாமி • A.P.நாகராஜன் •
கதை, வசனம்
A.P.நாகராஜன் •
டைரக்ஷன்
K.சோமு
சங்கீதம்
K.V.மஹாதேவன் •
ஸ்டுடியோ
பிலிம்செண்டர்